# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.596/2022 P.W.8

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நூர் முகமது | த-பெ | முகமது காசிம் |
| ஊர்: | : | மன்னார்குடி | | |
| வயது: | : | 65/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

1 ம் **எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் மன்னார்குடியில் வசித்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். நான் கடந்த 2015 ம் ஆண்டு பள்ளத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்தபோது 08.07.2015 அன்று 19.00 மணியளவில் பள்ளத்தூர் காவல் நிலைய பொறுப்பில் உள்ளபோது கோட்டையூர் ஸ்ரீராம் நகர் சர்சிவி ராமன் தெருவை சார்ந்த அந்தோணி ராஜ் மனைவி ராணி என்பவர் நிலையத்தில் ஆஜர் ஆகி அவர் செட்டிநாடு பஞ்சாயத்து துவக்க பள்ளியில் ஆசிரியை ஆக வேலை பார்த்து வருவதாகவும் அவரது கணவர் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று தற்சமயம் சென்னை இரயில்வே பெட்டி தயாரிப்பு தொழிற்சாலையில் வேலை பார்ப்பதாகவும் தான் தினமும் ஸ்ரீராம் நகரில் இருந்து செட்டிநாடு பள்ளிக்கூடத்திற்கு தனது இருசக்கர வாகனம் அக்டிவா TN 63 AW 7840 என்ற வாகனத்தில் சென்று வருவதாகவும் அது போல 08.07.2015 அன்று பள்ளி முடிந்து மாலை 16.45 மணியளவில் தனது வாகனத்தில் வீட்டிற்கு திரும்பி வரும்போது வேலங்குடி புளுஸ் கால்பந்து மைதானம் அருகில் வந்து கொண்டிருக்கும் போது பின்னால் இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து ஓரமாக வண்டியுடன் அணைத்து இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த நபர் சுமார் 7 பவுன் எடையுள்ள செயினை அறுத்து சென்றதாகவும் உடனே செயினை அறுத்து கொண்டு செல்கிறார்கள் என்று சத்தம் போடவும் பக்கத்தில் இருந்த கணேஷ் என்பவர் அவருடைய வாகனத்தில் பின் தொடர்ந்து விரட்டியதாகவும் அவர்கள் வேகமாக சென்று மறைந்துவிட்டதாகவும் அதன் மதிப்பு ரூ.70000 என்றும் தங்க

செயினை பறித்த இருநபர்களின் வயது சுமார் 25 இருக்கும் என்றும் முன்னால் ஓட்டி சென்ற நபர் கருப்பு சட்டை அணிந்திருந்ததாகவும் பின்னால் உட்கார்ந்திருந்த நபர் வெள்ளை சட்டை அணிந்திருந்ததாகவும் கூறி நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை பெற்று இரவு 7.00 மணிக்கு பள்ளத்தூர் காவல் நிலைய குற்ற எண். 108/2015 பிரிவு 392 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அசாஆ 9.** இந்த வழக்கானது பாரி குற்ற வழக்காக இருப்பதினால் பள்ளத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு தகவல் சொல்லியும் பின்பு முதல் தகவ்ல அறிக்கையை சம்பவம் இடம் சென்று காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். காவல் ஆய்வாளருக்கு புலன் விசாரணைக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. எதிரிகள் வந்த வாகனத்தின் அடையாளங்களோ அல்லது பதிவெண்ணோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் வாதி சொல்லவில்லை. 7 பவுன் தங்க செயினை அறுத்து சென்றதாக தான் புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். செயினின் அடையாளங்களோ மற்றும் என்ன வகையான செயின் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை எழுதியது யார் என்றால் புகார்தாரர் ராணி தான் எழுதினார். புகார்தாரருடன் யாராவது கூட வந்தார்களா என்றால் வந்தார்கள் யார் என்று தெரியாது. எதிரிகள் சம்பவ சமயத்தில் வெள்ளை சட்டை அணிந்திருந்ததாக புகார்தாரர் குறிப்பிட்டு இருந்தால் சரியா தவறா என்றால் பின்னார் அமர்ந்தவர் வெள்ளை சட்டை அணிந்திருந்தார். புகார்தாரர் புகாரில் 8 பவுன் செயின் காணாமல் போனதாக கூறியிருந்தால் சரியா தவறா என்றால் தவறு. பொய்யான புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.22 13:19:09 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.